**07.09.2023**
**OS 26/2022**
**வா.சா.2 பெரியவர்**
**குறுக்கு விசாரணை:-**

நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வரவில்லை. வழக்கறிஞர் அழைத்ததின் பேரில்தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். வழக்கறிஞர் கலைச்செல்வன் (வாதி) எனது பக்கத்து ஊர்காரர். பிரமாணவாக்குமூலத்தில் வழக்கு பற்றியும், வழக்கு சொத்துக்கள் பற்றி தெரியும் என்று சொல்லியுள்ளேன். அந்த சொத்து எவ்வாறு கலைச்செல்வனுக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. கலைச்செல்வன் அந்த சொத்தை விலைக்கு வாங்கினார். அருகே எனது நிலம் உள்ளதாக சொல்லியுள்ளேன். என்னுடைய நிருபணவாக்மூலத்தில் என்னுடைய நிலத்தின் சர்வே எண்ணோ, கலைச்செல்வன் சொத்தின் சர்வே எண்ணும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல வழக்கு சொத்திற்கு அருகில் எனது நிலம் இருந்தால் அந்த விவரத்தை பொறுத்து, ஒரு புல வரைபடம், கணினி பட்டா முதலியவை தாக்கல் செய்திருப்பேன் என்றும், எனக்கு வழக்கு சொத்து பற்றி எதுவும் தெரியாததால்தான் அதைப் பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. அந்த நிலம் அரசாங்கத்திற்கு சொந்தமான பஞ்சமி நிலம் என்றும், அது கலைச்செல்வனுக்கு பாத்தியப்பட்டதல்ல என்று சொன்னால் அதைப்பற்றி எனக்குத் தெரியாது. நான் கலைச்செல்வனுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், சொத்தை பற்றிய விவரம் எனக்குத் தெரியாது என்றாலும் சரியல்ல.

ஒம்:-S.கணேசன்
சார்பு நீதிபதி,
மேலூர்.